# நீலகேசி

## சாங்கிய வாதம்

### <u>செய்யுள்</u>

730 ஆங்கவன் சொல்லவவ் வத்தின புரத்து
ளோங்க வொருகொடி நட்டுரைக் கிற்பவ
னாங்க ணெவர்க்கு மறையென் றிருந்தவச்
சாங்கியன் றன்னைத் தலைப்பெயச் சென்றாள்.

731 சென்றா ளவன்றன் சிரத்தையைக் கண்டோத
நின்றா ளவன்றா னெறிபகர் கின்றனன்
பின்றான் பிரளையத் தாக்கமும் பேர்ச்சியு
மொன்றா வகையா லுரைகளை யொட்டா

732 பாலொத்து நின்ற பரமாத்துமனொடு
மூலப் பகுதியு மல்லாப் பகுதியு
மேலொத்தியன்ற விதிவிகற் போடு
நூலிற் கிடந்தவ நுண்பொரு ளன்றே.

733 ஒருங்கிருந் தார்கட் குடனவை யெல்லாம்
பருங்கினன் மெய்யும் பராசரன் றன்னை
விரும்பினள் போல வினவின ளன்றே
யருங்கல மாய வறிவினுள் மிக்காள்.

734 என்னைப் பயந்தீரிஃ தென்னெனக் கேட்டன
ணன்னுத லாயிது வென்னெறி யென்றன
னன்னனஃ தாயி னறிவி யெனச்சொல
வின்னன கேளென் றெடுத்தனன் சொல்லும்.

735 மன்னுயிர் தெற்றென வில்லது மான்செருக்
கென்னவு மிந்திய மைந்தைந் தொருமன
மன்னதன் மாத்திரை யைந்தைந்து பூதமும்
பன்னிய வையைம் பதப்பொரு ளென்றான்

736 எத்திறத் தின்னுஞ்செய் யான்குண மொன்றிலன்
றத்துவ னின்பன பேதன லேபக
னித்திய னெங்கு முளனெடுங் காட்சியன்
றுத்த லுடையனென் றோன்றலு மென்றான்.

737 நின்று பரந்தரு வாய்ப்பொறி யேதுமிக்
கொன்று கிரிகையின் றப்பியத் தம்மது
சென்று செய் மானிற் செருக்கத்தி னீரெட்டு
மன்றியு மைவகைப் பூதமு மன்றே.

738 நின்று பரந்தரு வாய்ப்பொறி யேதுமிக்
கொன்று கிரிகையின் றப்பியத் தம்மது
சென்று செய் மானிற் செருக்கத்தி னீரெட்டு
மன்றியு மைவகைப் பூதமு மன்றே.

739 கதக்களி யானைமுன் கல்லெறிந் தாற்போற்
பதப்பொரு டம்மைப் பழுதென் றுரைப்ப
மதத்தினின் மிக்கவன் மாதரை நோக்கி
யுதப்பென்னுங் குற்ற முரையெனக் கென்ன.

740 செய்யா துயிரெனச் செப்புகின் றாய்நின்னை
வையா யுயிருள தன்றெனின் வாக்கிவை
மெய்யாம் பிறசெய்கை யாதலி னாலிவை
மையா மினிநின்றன் மார்க்கமு மன்றே.

741 எத்திறத் தின்னுஞ்செய் யானவ னென்றலிற்
றத்துவஞ் சொல்லுந் தலைமக னாகிய
சித்தியு மில்லாந் திருட்ட விரோதமும்
பொய்த்தலுள் ளிட்டவும் புல்லுமற் றென்ன.

742 பெருமை யுயிர்க்குரை யேன்செய்கை பின்னும்
இருமை யுயிரென தாமிடை யொன்றுங்
கரும வுயிரு மிவற்றினி னன்றே
யருமை யுடைச்செய்கை யாக்கமு மென்றான்

743 செய்யு முயிர்களுஞ் செய்யா வுயிர்களும்
மெய்யி னுளவெனின் மேற்கோ ளழிதலும்
பொய்யும் பொதியறை மையுமற் றல்லவு
மெய்து மிதற்கினி யென்செய்தி யென்றாள்.

744 சோம்பன் குணமிலன் றோன்றா வொளிப்பின
னோம்பற் கருமையி னுண்ணுமாற் றானுயி
னாம்பின்னைச் செய்ததெ னன்கவ னின்றியும்
போம்பொழு தேலவ னாற்பொரு ளென்னோ.

745 ஆண்டரு வாய்த்தொழில் யாதுமில் லாயின்
வேண்டின்மெய் யாகி விகிர்தி விகற்பொடு
தீண்டலு மொட்டலுந் தேரினி லாதவன்
காண்டற்குந் துத்தற்குங் காரண மென்னோ.

746 முத்தாத்துமனை முனிந்தோ வதுவன்றிப்
புத்தாத்து மாக்கட் புரிந்தோ விரிந்தெங்குஞ்
சித்தாத்துமனாய்த் திரிவின்றி நின்ற
சுத்தாத்துமைச் சுழற்றுவ தென்றாள்.

747 பரமாத்துமனைப் பளிங்கடை போல
வருமாத்து மாக்களின் மன்னும் விகாரம்
தருமாத்திரையன்றித் தக்கதொன் றாக
வொருமாத்துமனை யுரைத்திடு கென்றாள்.

748 செல்லு மெனினுஞ் சிதையுஞ் செல்லானென்று
சொல்லு மெனினுமுன் சொல்லிய தாமெய்தும்
பல்லுநுன் னாவும் பதையா துரையன்றி
யெல்லுந் துணையு மிருவினை யென்றே.

749 யானென தென்னுஞ் செருக்கினை யீன்பது
மானெனப் பட்டது மன்னுமோர் சேதனை
தானினை யாக்குத றக்கின்ற சேதனை
மேனினைத் தானுரைத் தானல்ல னென்றாள்

750 மான்றான் பகுதி வழித்தோ வழித்தன்றித்
தான்றான் பிறிதோர் பொருளோ யிரண்டொடு
மூன்றாவ தொன்றினி யின்றா விருந்தவிச்
சான்றா ரறியவுஞ் சாற்றினி யென்றாள்.

751 முதற்பொரு ளேயாங் குணமது வாகின்
அதற்பிறி தென்னி னதுமனனு முண்டா
லிதற்கினி நீசொலற் பாலதென் னென்றாள்
சுதப்பொருண் மேனன்றுஞ் சொல்லுதல் வல்லாள்.

752 அருவாய காரண மாயவ் வியத்த
முருவா மறுதலை யொப்பிக்கு மென்பாய்
மருவாத சொல்லினை மாதிரந் தானே
பருவாய்ப் பதக படைத்திடு மென்னாய்.

753 பகைக்குண மாகிய பகுதி விகுதி
மிகைக்குணந் தோன்றுநின் மேற்கோ ளழித்துத்
தொகைக்கணம் யாவையுஞ் சூனிய மாமா
நகைக்குண மல்லது நம்பலை யென்றாள்.

754 புத்தேந் திரியமுங் கம்மேந் திரியமும்
பத்தேந் திரியத்தோ டொன்றாய்ப் படைத்தனை
பித்தேந் திரியமும் பேயேந் திரியமும்
குத்தேந் திரியமுங் கொண்டிலை யன்றே.

755 தந்திர மாவன தாமிடைத் தோன்றுவ
வந்தர வாத்துவ னைந்தென வேண்டினை
சிந்தனை யுள்ளிட்டுச் சீவன் குணமெனி
னிந்திரன் றானு மிணைநுனக் காமோ.

756 கைகளுங் காலு மிருசா ரிடக்கரு
மெய்திய வாக்குமற்றிந்திய மாமெனிற்
செய்யும் புலனு மறியு மறிவுமற்
றெய்த வுணர்ந்திங் கெடுத்துரை யென்றாள்.

757 காட்டிய வாறுங் கருமத்தி னாமெனி
னூட்டு முலையு முதடும் புருவமு
மாட்டுங் கவுளு மறமெல்லும் பற்களும்
கூட்டி மிடறுங் கொளக்குற்ற மென்னோ.

758 ஐந்துதன் மாத்திரை தாமணுவாற் றொடர்
கந்தங்க ணாதியிற் காம்புல னேயவை
வந்துபெருகி வரிசையி னான்மிகும்
புந்தியி னால்வகைப் பூதமு மென்றாள்.

759 ஒன்றாய்ப் பரந்திவ் வுலகு மலோகமுஞ்
சென்றாய்க் கிடந்த தசேதனை தானென்று
மன்றா யருவா யதுவவ்வா காயமு
மென்றா ளெழினெடுங் கண்ணிணை நல்லாள்.

760 தானரு வாய பொருளது வாமொலி
மேன்மரு வாதுரு வாதலி னான்மெய்ம்மை
நூன்மரு வாதுசொன் னாயிது வென்றனள்
மான்மரு வாவந்த நோக்கு மரியாள்.

761 பகுதியின் மானில்லை யிஃதினு மஃதில்லை
தொகுதிசெய் பல்குணந் தோற்றமு மில்லா
மிகுதிசெய் பூதத்து மெய்ம்மை பெறாமற்
றகுதியின் றத்தநின் றத்துவ மென்ன.

762 குருடனும் பங்குவுங் கூட்டத்திற் கூட்டிப்
பொருடம் தாக்கமும் போத்தந் துரைப்பிற்
றெருட லிலையவர் செய்கையிற் செய்கை
யிருடன்னை யின்றி யிவையெய்து மென்றாள்.

763 எவ்வகை யின்னும் விகார மிலாப்பொருட்
கிவ்வகை தம்மை யெடுத்துரை யென்செயும்
மெய்வகை யாலொப்பின் மேற்கோண் முதலிய
வவ்வகை யெல்லா மழிவுள தாமே.

764 கூடியு மாகாக் குணத்தின் நீயவட்
பாடி யுரைத்த வுயிரும் பகுதியும்
பேடிகள் சாரினும் பிள்ளை பெறாமையை
நாடியுங் காணென்று நன்னுத னக்காள்.

765 இல்லுளி யின்றிமற் றெங்கு மிவைமுன்னும்
புல்லின வேயாற் புணர்ச்சி புதிதெனச்
சொல்லின தென்செயத் தோற்றப் படுபொருள்
பல்லன தாமவை பண்டு முளவே.

766 ஆட லழித்தல் படைத்த லடங்குதல்
வீடுபெற் றாங்கண் விளங்க நிலைமையுங்
கூடிய வைந்து குணத்தின னாதலி
னாடிய குற்றங்க ணண்ணல வென்ன.

767 ஓதிய வெல்லா மொருவனி னங்கொரு
நீதி வகையா னெறிமைப் படுதலும்
வாதுசெய் வார்கள் பிறராய் வருவது
மூதிய மில்லை யொழியென் றுரைத்தாள்.

768 யானை குதிரை முதலாப் படைகுடி
யேனைய தாங்களு மெல்லா மவனெனிற்
றானென்று மாள்வது தன்னை யெனினங்கள்
கோனிவ னாமெனக் கூறினார் யாரோ.

769 என்னை யொழித்தினி யெல்லா மவனெனச்
சொன்ன முறைமைய னாகு மவனெனிற்
றன்னை யொழித்துத் தபுத்துடன் றின்றிடிற்
பின்னை யவனையோர் பித்தனென் னாமோ

770 தன்கையிற் றன்கண்ணைத் தானே பொதக்குத்தி
யென்செயக் குத்தினை யென்பார் பிறரில்லை
தன்கையிற் றன்கண்ணைத் தான்பொதக் குத்துவ
தென்செய வோவிதன் காரணஞ் சொல்லாய்.

771 தன்னைப் படைப்பின்முன் றானின்மை யாலில்லை
பின்னைப் படைக்கிற் படைக்கப் படுவதின்
முன்னைப் படைப்பென் முடிவில்லை மூடனே
நுன்னைப் படைத்தவர் யாரினி நோக்காய்.

772 கொன்றுகொன் றிட்டுத் தவஞ்செய்யி னத்தவம்
பொன்றுமற் றாதலி னஃதும் பொருத்தமின்
றின்றிதின் றிட்டுப் படைப்பிற் றெருட்சிமற்
றென்று மிலன்பெரி தேழையு மாமே

773 ஓர்ப்பவன் சொல்லவ னூனவன் றீனவன்
றீர்ப்பவ னோயவன் சீறு மவனுயிர்
நீப்பவன் சாபவ னீப்பவ னேற்பவன்
பேர்ப்பவ னாயும் பெறுகின்ற தென்னோ.

774 நாயாய்க் கடிக்கு நரியாய்ப் பலகொல்லும்
பேயாய்ப் புடைத்துண்ணும் பெற்றமு மாய்க்குத்து
மீயாய் நலியு மெறும்பாய்த் தெறுமெங்கும்
தீயா னொருவனின் றேவனு மென்றாள்.

775 வீடு தலைபெற வெந்துநெஞ் சாண்டிடத்
தாடி தவஞ்செய்த தன்கா லழித்திடப்
பாடிய கையிற் படைக்கு மிவனெனின்
மூடர்கட் டேற்ற முடிவுமுண் டாமோ.

776 நித்திய மாய பொருணின வாதலின்
வித்தினு ளுண்டென வேண்டுதி நீள்பனை
யெத்துணை யோவது வென்னினு நுன்கைக்கு
மித்துணை யுண்டென்ப தென்னைகொ லேழாய்.

777 இப்பொழு தில்லை யெதிரதற் குண்டெனி
னப்பொழு துண்மையு மின்மையு மாக்கி
னெப்பொரு டாங்களு மின்னன வேயெனச்
செப்பினள் தத்துவஞ் சேயரிக் கண்ணாள்.

778 உருவோ டருவமா காயமு மூன்று
மிருபதின் மேலுமைந் தாக விசைத்தனை
யருவோ டலோக மசேதன மூன்றிற்
செருவோ டுரிமையிற் சேர்பவு மன்றே

779 ஒன்றொன்றி னொன்றி யுலகுள் வழியெங்குஞ்
சென்றவ னுண்மை பகுதி யிதுமன்னு
மென்றனை யெண்முறை யறிமற் றீண்டு
நன்றன வீறா நிலமுத னான்கே.

780 பத்தனை யாய்நின் பரமாத்துமனையுஞ்
சித்தனை யாகக் கருதியல் சீவன்கட்
கத்தன்மை ஞானமு மென்னா யவனுக்குத்
துத்தலுங் காண்டலுஞ் சொல்லினை யன்றோ.

781 வண்டார் குழற்பெயர் மாணிழை யிற்றெனக்
கொண்டே னெனவவன் கூறினன் கூறலும்
பண்டே லறியெனப்பராசர நீயினிக்
கண்டா யெனச் சொல்லிக் காட்சி கொடுத்தாள்.

782 ஐந்து மிருபது மாகிய சொற்பொரு
டந்திவை யல்லது தத்துவ மில்லென்ற
சிந்தை யொழித்துச் சினவரன் சேவடி
வந்தனை யேசெய்து வாழிநீ யென்றாள்.

## உரை

பூரணரை நல்வழிப்படுத்தியதன் பின், நீலகேசி பூரணரது வேண்டுகோளுக்கிணங்க, பேர்போன சாங்கிய ஆசிரியர் பராசரா; வாழ்ந்துவந்த அத்தினாபுரத்துக்குப் புறப்பட்டாள். சாங்க சமயக் கோட்பாடுகளை விளக்கும்படி நீலகேசி கேட்க, பராசரர் அதற்கிணங்கினார்.

பராசரர் : எங்கள் கோட்பாட்டின்படி மெய்ந்நிலைகள் (தத்துவங்கள்) 25 ஆகும். அவை உயிர்நிலை (ஆன்மா) இயற்கை (பிரகிருதி), பெருநிலை (மகத்), செருக்கு (அகங்காரம்) புலன் (ஞானேந்திரியம்) ஐந்து, பொறி (கர்மேந்திரியம், ஐந்து, மனம், தன்மாத்திரைகள் ஐந்து, மூலப் பொருள்கள் (பூதங்கள்) ஐந்து ஆகியவை. உலகின் இறைவனாகிய தலைவன் (ஆப்தம்) செயலற்றவன்; குணமற்றவன். என்றும் துய்ப்பவனேயன்றித் துய்க்கப்படான். மாறுதலற்றவன், வினைத்தொடக்கற்றவன், என்றுமுள்ளவன், எங்கும் நிறைந்தவன், எல்லாம் உணர்பவன் யாவற்றையும் துய்ப்பவன். தலைவனைப் போலவே இயற்கையும் எங்கும் நிறைந்த உருவற்ற (அமூர்த்த) மாறுதலற்ற மெய்ம்மை : செயலற்றது, புலன்களால் அறியொணாதது, ஒருமையுடையது, மறைநிலையுடையது. இயற்கையிலிருந்து பெருநிலையும் அதனிடத்திருந்து செருக்கும், அதனிடமாக மனமும் தன் மாத்திரைகளும் புலன்களும் பொறிகளும் தோற்றுகின்றன. தன் மாத்திரைகள் ஐந்தினின்றும் ஐம்பூதங்கள் தோற்றுகின்றன. இவ்விருபத்தைந்து மெய்ந்நிலைகளை அல்லால் வேறு மெய்ம்மை இல்லை.

நீலகேசி : ஆன்மா செயலற்றதென்று கூறுவது எவ்வாறு பொருந்தும்! காட்சியும் அறிவும் செயலும் ஒருங்கேயுடையதாய், ஓய்வு ஒழிவு இன்றி உணர்வு (போத) மயமாயிருக்கும் ஆன்மாக்கள் செயலற்றவையாகும் என்கிறீர்கள். பிறருக்கு அறிவு விளக்கம் செய்யப்புகும் நீங்கள் ஆன்மா அன்றோ? பிற உயிர்கள் ஆன்மாக்கள் அல்லவானால், உங்கள் அறிவுரை கேட்டு, அவை தம்மைத் திருத்தும் என்று எங்ஙனம் எதிர்பார்த்தல் கூடும்?

பராசரர் : ஆன்மா மூவகைப்படும். அவை பேரான்மா, உள்ளுறை ஆன்மா, வினையான்மா என்பவை: இவற்றுள் பேரான்மா ஒன்றுக்கே செயலில்லை. மற்ற இரண்டுக்கும் செயல் உண்டு.

நீலகேசி : இதுவும் பொருந்தாது. பொதுவில் ஆன்மா செயலற்றதென்கிறீர்கள். பின் ஒருவகை செயலற்றது, இருவகை செயலுடையது என்கிறீர்கள். இது முன்னுக்குப்பின் முரணல்லவா? இருவேறு இயல்புடைய இரண்டு ஒரே பொருளின் இரு வகைகளாதல் இவ்வாறு? மேலும் செயலுடையவையாய் உயிர்களின் செயலுக்குக் காரணமாய் இரண்டு ஆன்மாக்கள் இருக்கையில், செயலற்ற சோம்பேறி ஆன்மா ஒன்றுக்கு என்ன வேண்டுதல் கூற்படக்கூடும்? செயலற்ற பேரான்மா, உடல்களிலும் உலகிலும் நின்று துய்ப்பதெவ்வாறு? எல்லாமறிந்த அப்பேருயிர் என்ன தீவினைப் பயனால் உலக வாழ்வில் சிக்குகிறது?

பராசரர் : ஆன்மாவின் செயலென்று நாம் கொள்வதெல்லாம் ஆன்மாவின் செயலுமல்ல, பேரான்மாவின் செயலுமல்ல; இயற்கை ஆற்றலின் செயலேயாகும். தன்னிறமற்ற பளிங்கின் பின்னாலுள்ள பூவின் நிறம் பளிங்கில் தெரிவதுபோலவே, இயற்கையின் பண்பும் செயலும் ஆன்மாவில் பட்டொளிர்கின்றன. தன்னுணர்வுடன் கூடி 'நான்' 'எனது' என்ற மறையில் ஏற்படும் துய்ப்பெல்லாம் உண்மையில் செருக்கின் செயல்; அச்செருக்கு பெருநிலையினின்றும் பெருநிலை இயற்கையினின்றும் தோன்றியவை.

நீலகேசி : இயற்கை அறிவுணர்வற்ற பொருள். அதனின்று தோன்றிய பெருநிலை, செருக்க முதலியவையும் அறிவுணர்வற்றவையாகத்தானே இருக்க முடியும்? அறிவற்ற பொருளினின்று அறிவுப்பொருள் தோற்றுவதெங்ஙனம்?

இயற்கை உருவற்றது (பருப்பொருண்மையற்றது) காரியகாரணத் தொடர்பற்றது எனக் கொள்கிறீர்கள். அதனின்று தோன்றிய பெருநிலையோ உருவுடையது, காரியகாரணத் தொடர்புடையது. இங்ஙனம் உருவற்ற நிலையிலிருந்து உருவைப் பெறுவதைவிட, வெறுவெளியின்று பொருள்களைப் பெறலாகுமன்றோ?

புலன்கள், பொறிகள், மனம் முதலியவை தனித்தனி மெய்ந்நிலைகளாகக் கூடுமானால் கை, கால், மலங்கழிக்கும் உறுப்புக்கள், பிறப்பு உறுப்புக்கள் ஆகியவையும் தனி மெய்ந்நிலைகளாகாததேனோ? தாமாக ஒன்றையும் உணரமாட்டாத இவற்றைப் பொறிபுலனென்பானேன்? பொறிகள் செயல் உறுப்புக்களானால், அவற்றினும் தெளிவுபடச் செயலாற்றவல்ல உதடு, இடுப்பு, நாக்கு, பல் முதலியவற்றைப் பொறிகள் என்று கூறாததென்ன? ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் ஆகிய தன்மாத்திரைகள் உலகியற் பொருள்களுடன் தொடர்புடையவையாயிருக்க, அவற்றைச் செருக்கிலிருந்து தருவிப்பானேன்? செருக்கு தன்னுணர்வின் பயனால் அதிலிருந்து உலகியல் பொருள்களின் தொடர்புடைய இத்தன்மாத்திரைகள் எப்படித் தோன்றும்.

ஓசை வானவெளியின் இயல்பென்கிறீர்கள். உருவற்றதாய், உணர்வற்றதாய், எங்கும் நிறைந்த வானவெளியிலிருந்து உலகியற் பொருள்களின் உராய்வால் தோன்றும் ஓசை உண்டாகிறது என்றல் பொருந்தாது.

உயிர் உடல் தொடர்பை விளக்க நொண்டிமீது ஊரும் குருடனை உவமை கூறுகிறீர்கள். உங்கள் முதனிலை விளக்கப்படி இது பொருந்தாது; ஏனெனில் இயற்கை, உயிர்நிலை ஆகிய இரண்டுமே செயலற்றவை என நீங்கள் கொள்கிறீர்கள். இது இரண்டு அலிகள் மணவாழ்வால் குழந்தை உண்டாவதாகக் கூறுவது போன்றது.

உயிர்கள் பல அல்ல, ஒன்றென்றும்; உயிரும் இயற்கையும் எங்கும் நிறைந்தவை என்றும் கூறுகிறீர்கள். ஆகவே, இரண்டும் என்றும் இணைந்திருக்க வேண்டும். ஆனால், அவை என்றோ இணைந்து உலகு தோற்றுவதாக நீங்கள் கூறுவது தவறு. உங்களில் பல ஆன்மவாதிகள் கூறுவதைவிட, நீங்கள் பின்னம் முரண்பாடுடையது. நீங்கள் பிறருக்க அறவுரை பகர்கிறீர்கள். ஆன்மா ஒன்றேயானால் அறவுரை தரும் ஆசிரியர், பெறும் மாணவருக்கு இடம் ஏது? பலியாட்டில் (யாகத்தில்) உயிர்க்கொலை செய்தல் தற்கொலையன்றி வேறென்ன ஆகக்கூடும்?

படைப்பின்முன் பொருளில்லாது, படைத்தபின் புத்தம் புதிதாகத் தோன்றிற்று என்றால், படைக்கும் இறைவன்மட்டும் அங்ஙனம் தோற்றாதது ஏன்? இறைவன் செயலன்றி வேறு செயலில்லை என்றால், கொலையும் பழியுங்கூட அவன் செயலேயாதல் வேண்டும். ஒருயிர் வாதம் உண்மையானால், கொல்வானும் கொல்லப்படுவானும், அறிவுடை ஆசானும், அறிவுக் குறைவுடைய ாணவனும், மருத்துவனும் நோயாளியும், ஒன்றுபட்டு அறிவுக்குழப்பம் விளைகின்றது.

மாறா நிலையுடைமை (அவிசலித நித்தியம்) பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால் வளர்ச்சிபற்றிப் பலபடக் கூறுகிறீர்கள். மாறுதலற்ற நிலையுடைய உலகில் வாழ்வு தாழ்வு இருக்க முடியாது.

பராசரர் இவ்வளவும் கேட்டு, அல்லலுற்றழுங்கி, மெய்ம்மை விளக்கம் கோரினார். நீலகேசி, உண்மை. - இன்மை இணைந்த இணைப்பே (அஸ்தி நாஸ்தி தத்துவமே) உலகின் அடிப்படை என்றும், பேரான்மா என்பது சமணர் சித்தபரமேஷ்டிக்குச் சரியானதாயினும், அறிவு முதலிய பண்புகளை உணர்வற்ற இயற்கையிடம் சுமத்தாது, உயிர்களின் இயல்புகள் என்று கூறுதல் நலம் என்றும் விளக்கினாள். இறுதியில் மும்மணி (இரத்தினத்திரயம்) விளக்கத்தால் பராசரர் விளக்கமுற்றார்.